**ஏப்ரல் – 19**

# TNPSC துளிகள்

- மேலாண்மையின் கீழ் வரும் சராசரி சொத்து குறித்த வரம்பில் (AAUM - Average assets under management) ரூ. 5 லட்சம் கோடியைக் கடந்த முதல் இந்திய பரஸ்பர நிதியம் SBI நிதி மேலாண்மை நிறுவனம் ஆகும்.
  - இது இந்தியாவின் மிகப்பெரிய கடன் வழங்கும் நிறுவனமான ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா மற்றும் ஐரோப்பாவின் மிகப்பெரியச் சொத்து மேலாண்மை நிறுவனமான அமுன்டி ஆகியவற்றின் ஒரு கூட்டு நிறுவனமாகும்.
- மனஸ் செயலி (MANAS) என்பது மன நலம் மற்றும் இயல்பு நிலைமையைத் தருவித்து தரும் அமைப்பு (Mental Health and Normalcy Augmentation System) எனப்படும் ஒரு நலவாழ்வுச் செயலி ஆகும்.
  - இது பிரதமரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆலோசனை சபையினால் (PM-STIAC) ஒரு தேசியத் திட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தீர்ப்பாயங்கள் சீர்திருத்தம் (சீரமைப்பு மற்றும் பணி நிபந்தனைகள்) அவசர சட்டம், 2021

- இது சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தால் முன்மொழியப் பட்டுள்ளது.
- இந்த அவசரச் சட்டத்தைக் குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ளார்.
- இது ஏற்கெனவே இருக்கும் சில மேல்முறையீட்டு அமைப்புகளை கலைக்கச் செய்வதோடு அவற்றின் செயல்பாடுகள் (மேல்முறையீடுகளை விசாரிப்பது போன்ற செயல்பாடுகள்) போன்றவற்றை ஏற்கெனவே இருக்கும் நீதித்துறை அமைப்புகளுக்கு மாற்றச் செய்கிறது.
- தீர்ப்பாயங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஒரு தேர்தல் மற்றும் தேர்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசால் நியமிக்கப்படுவர் என இது கூறுகிறது.
- மேலும் இச்சட்டம் அக்குழுவின் உள்ளடக்க உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது இந்தியாவின் தலைமை நீதிபதி அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒரு உச்சநீதிமன்ற நீதிபதியால் மேற்கொள்ளப்படும் எனவும் கூறுகின்றது.
- பதவிக்காலம் – ஒரு தீர்ப்பாயத்தின் தலைவர் 4 வருடங்கள் என்ற ஒரு பதவிக் காலத்தையோ அல்லது அவர் 70 வயதினை அடையும் வரையோ, இதில் எது முன்பாக வருகின்றதோ அது வரையில் அப்பதவியினை வகிப்பார்.
- ஒரு தீர்ப்பாயத்தின் மற்ற இதர உறுப்பினர்கள் 4 வருடங்கள் என்ற ஒரு பதவிக் காலத்தையோ அல்லது அவர் 67 வயதினை அடையும் வரையோ, இதில் எது முன்பாக வருகின்றதோ அதுவரையில் அப்பதவியினை வகிப்பர்.
- இந்த அவசரச் சட்டம், 2017 ஆம் ஆண்டின் நிதியியல் சட்டத்தின் வரம்பிலிருந்து பின்வரும் தீர்ப்பாயங்கள் / மேல்முறையீட்டு ஆணையங்களை நீக்கியுள்ளது.
  - 1994 ஆம் ஆண்டு இந்திய விமானநிலை ஆணையச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப் பட்ட விமான நிலைய மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்
  - 1994 ஆம் ஆண்டு வர்த்தக முத்திரைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட

மேல்முறையீட்டு மன்றம்

- 1961 ஆம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட முன்கூட்டிய விதிகளுக்கான ஆணையம்
- 1952 ஆம் ஆண்டின் ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட திரைப்படச் சான்றிதழ் மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

❖ இந்தத் தீர்ப்பாயங்களில் மக்கள் பெருமளவில் வழக்குத் தொடுப்பவராக இருப்பது இல்லை.

❖ 2017 ஆம் ஆண்டின் நிதியியல் சட்டத்தின்படி, ஒரே மாதிரியான செயல்பாட்டைக் கொண்டிருப்பதன் அடிப்படையில் ஏழு தீர்ப்பாயங்கள் கலைக்கப்பட்டதோடு அல்லது ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதோடு அவற்றின் எண்ணிக்கை 20 என்பதிலிருந்து 19 என்பதாக குறைக்கப்பட்டது.

**Transfer of functions of key appellate bodies as proposed under the Ordinance**

| **Acts** | **Appellate body** | **Proposed entity** |
|---|---|---|
| The Cinematograph Act, 1952 | Appellate Tribunal | High Court |
| The Trade Marks Act, 1999 | Appellate Board | High Court |
| The Copyright Act, 1957 | Appellate Board | Commercial Court or the Commercial Division of a High Court* |
| The Customs Act, 1962 | Authority for Advance Rulings | High Court |
| The Patents Act, 1970 | Appellate Board | High Court |
| The Airports Authority of India Act, 1994 | Airport Appellate Tribunal | Central government, for disputes arising from the disposal of properties left on airport premises by unauthorised occupants.<br>High Court, for appeals against orders of an eviction officer. |

### *தீர்ப்பாயங்கள்*

❖ தீர்ப்பாயம் என்பது ஒரு பகுதியளவு நீதித்துறை சார் அமைப்பாகும்.

❖ இது நிர்வாகம் அல்லது வரி தொடர்பான விவகாரங்களைத் தீர்க்கச் செய்வது போன்ற விவகாரங்களைக் கையாள ஏற்படுத்தப்பட்டது.

❖ அசலாக அவை அரசியலமைப்பின் ஒரு பகுதியாக தொடங்கப்படவில்லை.

❖ 42வது திருத்தச் சட்டம் ஸ்வரன்சிங் குழுவின் பரிந்துரைகளின் பேரில் இந்த விதிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

❖ இந்தத் திருத்தம் அரசியலமைப்பில் தீர்ப்பாயங்கள் என்பதைச் சேர்த்ததோடு 323A

மற்றும் 323B என்ற இரண்டு சரத்துகளைக் கொண்டிருக்கும் பகுதி XIV-A என்பதையும் அறிமுகப் படுத்தியது.

# சர்வதேசச் செய்திகள்

## 3000 வருடங்கள் பழமையான நகரம்

- எகிப்து நாடு தனது லக்சர் பகுதி என்பதின் அருகில் 3000 வருடங்கள் பழமையான தொலைந்த நகரம் ஒன்றினைக் கண்டறிந்து உள்ளது.
- இது நைல் நதியின் மேற்குக் கரையோரத்தில் அமைந்து இருக்கின்றது.
- இது அடோன் எனும் கடவுள் மற்றும் மூன்றாம் அமென்ஹோடெப் என்ற மன்னர் ஆகியோருடன் தொடர்புடையதாகும்.
- இது 3000 வருடங்களுக்கு முந்தைய ஒரு பொற்காலமான பேரோக்கள் (pharaohs) காலத்தைச் சேர்ந்த, இதுவரையில் எகிப்தில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய பண்டைய நகரமாகும்.
- முறையாக அடென் எனப் பெயரிடப்பட்ட இந்த நகரம் பொதுவாக “தொலைந்து போன தங்க நகரம்” என்று அழைக்கப்படுகின்றது.



# பொருளாதாரச் செய்திகள்

## சிறப்பு வாக்களிப்பு உரிமைகள்

- சமீபத்தில் G20 குழுவின் நிதி அமைச்சர்கள், அதன் உறுப்பினர் நாடுகளுக்குப் புதிதாக சிறப்பு வாக்களிப்பு உரிமைகளை அளித்திட சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- சர்வதேச நாணய நிதியம் அதன் உறுப்பினர் நாடுகளுக்கு 650 மில்லியன் அமெரிக்க டாலர் என்ற மதிப்பிலான சிறப்பு வாக்களிப்பு உரிமைகளை அளித்திட அனுமதிக்கப் பட்டு உள்ளது.

### *சிறப்பு வாக்களிப்பு உரிமைகள்*

- இது ஒரு சர்வதேச கையிருப்புச் சொத்து ஆகும்.
- இது 1969 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தால் அதன் உறுப்பினர் நாடுகளின்

அலுவல்பூர்வ கையிருப்புகளுக்குப் பதிலீடு செய்வதற்காக உருவாக்கப்பட்டது.

- இந்தச் சிறப்பு வாக்களிப்பு உரிமைகளின் மதிப்பானது உலகின் 5 நாணயங்களின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.
- அவை அமெரிக்க டாலர், ஜப்பானிய யென், சீனாவின் ரென்மின்பி, பிரிட்டிஷாரின் பவுண்ட் ஸ்டெர்லிங் மற்றும் யூரோ ஆகியனவாகும்.
- இந்தச் சிறப்பு வாக்களிப்பு உரிமைகளின் மதிப்பு தினந்தோறும் கணக்கிடப் படுகின்றது.
- சர்வதேச நாணய நிதியத்தில் ஓர் உறுப்பு நாட்டின் வாக்களிக்கும் சக்தியானது சிறப்பு வாக்களிப்பு உரிமைகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது.
- இது ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையின் அடிப்படையில் முதன்மையாக இருக்கின்றது.

### வருடாந்திர வளர்ச்சிக் குழுவின் 103வது சந்திப்பு

- இந்தியாவிலிருந்து மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சர் நிர்மலா சீதாராமன் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.
- இந்தக் கூட்டத்தில் அவர் இந்தியா, வங்கதேசம், பூடான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்.
- அக்கூட்டத்தில் அவர் இந்தியாவானது ஆத்ம நிர்பர் தொகுப்புத் திட்டத்தின் கீழ், ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பில் 13 சதவிகிதத்திற்கும் அதிகமான அளவாக 27.1 டிரில்லியன் ரூபாய் என்ற அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதை அறிவித்தார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### ஆர்டிமிஸ் திட்டம்


- தேசிய விண்வெளிப் பயணம் மற்றும் விண்வெளி நிர்வாகத் திட்டம் அல்லது நாசா தனது ஆர்டிமிஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக நிலவின் மீது வெள்ளையர் அல்லாத முதலாவது நபரை அனுப்ப திட்டமிட்டுள்ளது.
- கூடுதலாக, நாசா அத்திட்டத்தின் கீழ் நிலவின் மீது ஒரு பெண்ணையும் முதல் முறையாக அனுப்பத் திட்டமிட்டுள்ளது.
- ஆர்டிமிஸ் திட்டம் என்பது ஒரு மனிதனின் சர்வதேச விண்வெளிப் பயணத் திட்டம் ஆகும்.
- இத்திட்டத்தின் முதன்மையான நோக்கம் 2024 ஆம் ஆண்டிற்குள்ளாக நிலவின் தென் துருவப் பகுதிக்கு ஒரு மனித விண்வெளிப் பயணத்தைச் செலுத்துவது என்பதாகும்.

## முக்கிய தினங்கள்

### திருநர் நலன் தினம் – ஏப்ரல் 15

- 2008 ஆம் ஆண்டில் அப்போதைய திமுக ஆட்சியின் கீழ் தமிழ்நாடு இந்தியாவின் முதலாவது திருநர் நல வாரியத்தை ஏற்படுத்தியது.

- 2006 ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வர் திரு கருணாநிதி அவர்கள் முந்தைய அடைமொழியான அரவாணி என்பதை நீக்கி விட்டு, அதற்குப் பதிலாக மிகுந்த கண்ணியமான திருநங்கை என்ற வார்த்தையை அவர்களுக்குச் சூட்டினார்.
- சமூக நல்வாழ்வுத் துறையின் கீழ் அந்தப் பெயரோடு ஒரு நலவாரியம் அமைக்கப் பட்டது.
- 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் தேதி, உச்சநீதிமன்றம், தேசிய சட்ட உதவிகள் மையம் எதிர் இந்திய ஒன்றியம் என்ற வழக்கில் திருநர் சமூகத்தை மூன்றாம் பாலினத்தவர் என அங்கீகரித்து தனது தீர்ப்பை வழங்கியது.
- 2019 ஆம் ஆண்டு, அப்போதைய அதிமுக தலைமையிலான அரசாங்கம் திருநங்கை என்ற பதத்தை மூன்றாம் பாலினத்தவர் என்ற பதத்திற்கு மாற்றியது.




## இமாச்சல தினம் – ஏப்ரல் 15

- இமாச்சலம் என்பது பனி சூழ்ந்த பகுதி என்பதாகும்.
- 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி, தலைமை ஆணையரால் நிர்வகிக்கப்படக் கூடிய ஒரு மாகாணமாக இமாச்சல் உருவாக்கப்பட்டது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதி இது ஒரு "C" பிரிவு மாநிலமாக மாற்றப்பட்டது.
- பின்பு 1970 ஆம் ஆண்டில், பாராளுமன்றம் இமாச்சலப் பிரதேசம் எனும் சட்டத்தை இயற்றியது.
- அது முதல் இமாச்சலப் பிரதேசம் ஒரு முழுமையான மாநிலமாக உருவெடுத்தது.
- இமாச்சலப் பிரதேசத்திற்கு மாநிலம் என்ற ஓர் அலுவல்பூர்வ அங்கீகாரமானது 1971 ஆம் ஆண்டு ஜனவரி 25ம் தேதி அன்று அளிக்கப்பட்டது.

## உலக ஆதரவுக் குரல் தினம் – ஏப்ரல் 14

- ஆதரவுக் குரல் எனும் நிகழ்வினைக் கொண்டாடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் உலகளாவிய வருடாந்திர நிகழ்வு இது ஆகும்.

- 1999 ஆம் ஆண்டில் பிரேசிலில் ஒரு சிறியக் கொண்டாட்டத்துடன் இது தொடங்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு 'ஒரு உலகம் பல குரல்கள்' என்பதாகும்

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★